# வல்வெட்டித்துறை நகரசபை
## அறுபத்தோராவது சபை அமர்வு – 20.12.2022

நகர சபையின் அறுபத்தோராவது அமர்வு சபை மண்டபத்தில் **20.12.2022 செவ்வாய்க்கிழமை மு.ப 9.30** மணியளவில் தவிசாளர் திரு.இ.சுரேன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது.

கூட்டத்திற்கு சமூகமளித்தோர்.

| | | | |
|---|---|---|---|
| **1.** | திரு.கந்தசாமி சதீஸ் | - | கௌரவ உறுப்பினர். |
| **2.** | திருமதி.இராஜேஸ்வரி குணரத்தினம் | - | கௌரவ உறுப்பினர். |
| **3.** | திரு.குகதாஸ் கமலதாஸ் | - | கௌரவ உறுப்பினர். |
| **4.** | திரு.தங்கவேலாயுதம் சுந்தரலிங்கம் | - | கௌரவ உபதவிசாளர். |
| **5.** | திரு.இராமச்சந்திரன் சுரேன் | - | கௌரவ தவிசாளர். |
| **6.** | திரு.மகாலிங்கம் மயூரன் | | கௌரவ உறுப்பினர். |
| **7.** | திரு.துரைராசா ஸ்ரீதரன் | - | கௌரவ உறுப்பினர். |
| **8.** | திரு.சண்முகம்பிள்ளை சண்முகதாஸ் | - | கௌரவ உறுப்பினர். |
| **9.** | திரு.முருகுப்பிள்ளை ஆனந்தராசா | - | கௌரவ உறுப்பினர். |
| **10.** | திரு.பாலச்சந்திரன் ஜெகன் | - | கௌரவ உறுப்பினர். |
| **11.** | திரு.சபாரத்தினம் செல்வேந்திரா | - | கௌரவ உறுப்பினர். |
| **12.** | திருமதி சுந்தரேஸ்வரி கவிஞன் | - | கௌரவ உறுப்பினர். |
| **13.** | திரு.அருமைரத்தினம் சதீஸ்வரன் | - | கௌரவ உறுப்பினர் |
| **14.** | திரு.ஆறுமுகம் ஞானேந்திரன் | - | கௌரவ உறுப்பினர். |
| **15.** | திருமதி.இந்திரன் கைலாஜினி | - | கௌரவ உறுப்பினர். |

மௌன வணக்கத்துடன் சபை அமர்வை ஆரம்பித்த தவிசாளர், முதலில் சென்ற கூட்ட அறிக்கைகளை அங்கீகரிப்பதில், 29.11.2022 ஆந் திகதி நடைபெற்ற 60 ஆவது சபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் தவிசாளர் சபையை கேட்டுக்கொண்டார். திருத்தங்கள் ஏதுமற்ற நிலையில் கூட்டக்குறிப்பானது உறுப்பினர் திரு.து.ஸ்ரீதரன் முன்மொழிய உறுப்பினர் திரு.கு.கமலதாஸ் வழிமொழிய கூட்டக்குறிப்பானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்து 09.12.2022 ஆந் திகதி நடைபெற்ற 48 ஆவது விசேடசபை அமர்விற்கான குறிப்பில் திருத்தங்கள் ஏதுமிருப்பின் குறிப்பிடுமாறும் அல்லது கூட்ட குறிப்பை அங்கீகரிக்குமாறும் தவிசாளர் சபையை கேட்டுக்கொண்டார். திருத்தங்கள் ஏதுமற்ற நிலையில் கூட்டக்குறிப்பானது உறுப்பினர் திரு.கு.கமலதாஸ் முன்மொழிய உபதவிசாளர் திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிய கூட்டக்குறிப்பானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**அடுத்**து தவிசாளரின் விசேட அறிவித்தலில் எதிர்வரும் 23.12.2023 ஆந்திகதி தேசிய வாசிப்பு மாத உள்@ராட்சி மாத நிறைவு நாள் விழாவினை நடாத்தப்படுவதற்கான முன் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பாக தவிசாளரால் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டது. முன்னாள் உறுப்பினர் திரு.சிவஞானசுந்தரம் அவர்கள் நிதி ஒதுக்கீட்டில (ரூபா 300,000.00) புதுவளவு வீதி புனரமைப்பு மேற்கொள்ளப்படுவது முழுமை பெறாது என்பதனால் குறைவாக புனரமைக்கப்படும் வீதியானது போக்குவரத்திற்கு இடையூறாகவும், மழைக்காலங்களில் வெள்ளப்பிரச்சனைகளை தோற்றுவிப்பதாகவும் அமையும் என்பதனால் அவ்வேலைத்திட்டத்திற்கு பதிலாக அவ்வீதியிலுள்ள சிறு ஒழுங்கை ஒன்றை இந்நிதியினை பயன்படுத்தி புனரமைத்து தரும்படியும் போதிய நிதியுதவிகள் கிடைக்கின்ற பட்சத்தில் புதுவளவு வீதியை முழுமையாக புனரமைக்கும்படியும், அவ்வூர் மக்கள் ஒப்பமிட்டு கோரிக்கை கடிதம் தந்துள்ளமை குறித்து சபையில் ஆராயப்பட்ட போது தாம் அவ்வட்டாரத்திற்குரிய உறுப்பினர் என்ற அடிப்படையில் அவ்வேலைத்திட்டத்தின் அவசியம் குறித்து ஆராய்ந்தும் அம்மக்களுடன் கலந்துரையாடியும் அவ்வேலைத்திட்டத்தின் தேவைப்பாடு தொடர்பில் உறுதிப்படுத்துவதாக உறுப்பினர் திரு.ம.மயூரனால் குறிப்பிடப்பட்டது. அவரால் குறிக்கப்படும் வேலைத்திட்டத்தினை ஏற்று நறைவேற்ற சபை அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை சந்தியிலமைந்துள்ள பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால் Fairmed நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 60,000.00 இல் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகு வசதியினை (Ramp) ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்திற்கு முன்னால் CDLG திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 200,000.00 இல் அணுகு வசதியினை (Ramp) ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொலிகண்டி மீன்சந்தையினை பொதுசந்தையாக கணித்து 2023 ஆம் ஆண்டிற்கான குத்தகைக்கு விடுவதற்கு நகராட்சி மன்றத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் பொதுச்சந்தையெனில் வெளியிடத்து மீன்களை கொண்டு வந்து விற்கப்படுவதனால், தமது இடத்து மீன்களை விற்கமுடியாமலிருக்குமெனவும், 2018 ஆம் ஆண்டு கூறுவிலை சந்தையாக மாற்றுவதற்கே நகரசபையுடன் கலந்துரையாடி ஒப்பந்தத்திற்கு வந்ததாகவும் அதற்கான ஆவணங்களெதுவும் எழுத்து மூலமாக இல்லாதிருப்பதாகவும், அதனால் கூறுவிலை சந்தையாக அச்சந்தையை மீளவும் ஒப்படைக்குமாறு கோரி கூறுவிலை சந்தையாக்குவதற்காக ஒப்பந்தத்தினை மேற்கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாக தெரிவித்து சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் கலந்துரையாடியதாக தவிசாளரால் குறிப்பிடப்பட்ட போது, பொதுச்சந்தையாக இருப்பின் வெளியிடத்து மீன்கள் விற்பதனை தடை செய்ய முடியாது. ஆனால் பொலிகண்டி சந்தை பலகாலமாக கூறுவிலை சந்தையாகவே இருப்பதாகவும், பெருமளவான சிறுதொழில் புரிவோர் அங்கு இருப்பதால் வெளியிடத்து மீன்களை விற்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். எனவே பொதுச்சந்தையாக வைத்திராது அவர்களது கோரிக்கைப்படி மீளவும் ஒப்படைக்கலாமெனவும், உறுப்பினர் திரு.த.சுந்தரலிங்கத்தினால் குறிப்பிடப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரம் என்று பார்க்கையில் வெளியிடத்து மீன்கள் விற்கப்படுவதனால் நன்மை கூடவாகுமென உறுப்பினர் திரு.ச.சண்முகதாஸால் குறிப்பிடப்பட்டது. கூறுவிலை சந்தையினால் நகராட்சி மன்றத்திற்கு வருமானம் வரும் எனினும் காலங்காலமாக அச்சந்தையில் மீன்களை விற்பவர்கள் பாதிப்படையாத வகையில் பார்க்க வேண்டும் இச்சந்தையினை பொதுச்சந்தையாகவே வைத்துக்கொண்டு சங்கத்தினால் சில சட்டங்களை நடைமுறைப்படுத்தலாம் என உறுப்பினர் திரு.ம.மயூரனால் குறிப்பிடப்பட்டது. அவர்களுக்கென சங்கங்கள் இருக்கின்ற போது அவற்றினை மீறி செயற்படமுடியாதென உறுப்பினர் திரு.து.ஸ்ரீதரனால் கூறப்பட்டது. குறித்த சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் பெரும்பான்மையான மக்கள் கூறுவிலை சந்தையினையே விரும்புகின்றனர் எனவும், இயலாமை உடையவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் போன்றவர்களை முதன்மைப்படுத்தி அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் இவ் எற்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமெனவும் சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்ட போது, சபையினரால் மக்களின் வாழ்வாதாரம் கருதி நகராட்சி மன்றத்திற்கு எவ்வித வருமான இழப்புமின்றி மீளவும் நகரசபை துணைவிதிகளின் நிபந்தனைகளிற்கிணங்க அவ்விதிகளை அவர்கள் எற்கும் பட்சத்தில் அதனை கூறுவிலை சந்தையாக வழங்கலாமென தீர்மானிக்கப்பட்டது.

அவ்விடத்தில் விற்கப்படுகின்ற மீன்களின் தொகை போதாமலிருப்பதனாலேயே வெளியிடத்து மீன்களை எடுத்து விற்பதாக உறுப்பினர் திரு.மு.ஆனந்தராசாவால் குறிப்பிடப்பட்டது. அங்கு சங்கமென்ற ஒரு கட்டுப்பாடு இன்றுவரை காணப்படுகின்றது. ஒரு சிலரின் செயற்பாட்டினால் அதனை குழப்பக்கூடாதென உறுப்பினர் திரு.கு.கமலதாஸால் குறிப்பிடப்பட்டது. பொலிகண்டி மீன்சந்தை மாத்திரமின்றி தொண்டைமானாறு சந்தையையும், குறித்த கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் கூறுவிலை சந்தையாக்க கோருமிடத்து மீண்டும் நகராட்சி மன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழமைந்த கூறுவிலை சந்தையாக மாற்ற அனுமதிக்க வேண்டுமென்ற உறுப்பினர் திரு.கு.கமலதாஸால் குறிப்பிடப்பட்டமை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு குறித்த சங்கத்தின் கோரிக்கை சமர்ப்பிக்கப்படமிடத்து அவ்விடயம் சாதகமாகப் பரிசீலிக்கப்படலாமெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் ஆதிகோவிலடி சந்தையும் நீண்டகாலமாக நகராட்சி மன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு இருப்பதனால் அச்சந்தையையும் கூறுவிலை சந்தை என்றவாறு நகராட்சி மன்றத்தின் கட்டுப்பாட்டிற்குள் எடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சபையினரால் கருத்து தெரிவிக்கப்பட்ட போது, தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக தவிசாளரால் சபையினருக்கு உறுதியளிக்கப்பட்டது.

யா / சிதம்பராக் கல்லூரி மாணவர்கள் (**தரம் 1-5**) ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல் தடாகத்தினை பயன்படுத்துவதற்கு அனுமதி கோரியுள்ள விடயம் சபையில் ஆராயப்பட்ட போது, பாடசாலை மாணவர்கள் என்ற வகையில் வார இறுதி நாட்களில் நீச்சல் பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்கு நீச்சல் தடாகத்தினை பயன்படுத்த அனுமதி வழங்கலாமென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் சம்பளக்கணக்கில் ஒரு மில்லியன் மிகைப்பணம் இருப்பதனால் அதனை அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்துவதற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியினை பெற்றுக்கொள்வதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொள்கின்ற பயனாளிகள் தாம் பெற்றுக்கொள்ளுகின்ற உதவிகளுக்கான செலவினம் சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை விட மேலதிகமாக காணப்படுகின்ற பட்சத்தில் அவற்றிற்கான நிதியினை தாமே செலுத்தி பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்திருப்பதனால் அதற்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் தீர்மானமெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் நடைமுறைக்கணக்கில் மேலதிகமாக திரவப்பணம் இருப்பதனால் அதனை குறுகிய கால நிலையான வைப்பிலிடுவதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

அடுத்து **19.12.2022** ஆந் திகதி நடைபெற்ற **நிதிக்குழுக் கூட்ட சிபார்சுகள்** ஆராயப்பட்டு அதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **சபைக்கு அறிவிக்க வேண்டிய விடயங்கள்** தொடர்பில் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டு தேவையான விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அடுத்து **பிற விடயங்கள்** தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- மரணச்சடங்குகளுக்கு தேவையான பந்தல், கதிரைகள் மற்றும் தேவையான பொருட்களை கொள்வனவு செய்து நகராட்சி மன்றத்தினால் சேவையாக வழங்குவதன் மூலம் வருமானமீட்டலாமென உறுப்பினர் திரு.கு.கமலதாஸால் குறிப்பிடப்பட்டது. இதனை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளலாமெனவும், நிதிக்கிடைப்பனவிற்கேற்ப செயற்படுத்துவது தொடர்பில் தீர்மானிக்கலாமெனவும், சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.
- மரணச்சடங்குகளை நடாத்துவதற்கான மண்டபம் ஒன்றினை அமைத்து (Funerals’ Palour) அதன் மூலம் வருமானமீட்டலாமென உறுப்பினர் திரு.ச.செல்வேந்திராவால் குறிப்பிடப்பட்டமையும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- Solar Lighr கள் பழுதடைந்துள்ளவற்றை திருத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் படி உறுப்பினர் திரு.பா.ஜெகனால் குறிப்பிடப்பட்டமை தொடர்பில் கவனம் செலுத்துவதாக தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக தவிசாளரின் நன்றியுடன் முற்பகல் 10.40 மணியளவில் சபை அமர்வு நிறைவுபெற்றது.

**தீர்மான இல :1242/20.12.2022**

**ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ. இல | உ.சீ. இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1 | க.சிவறஞ்சன் | எமது நகராட்சி மன்றத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தவர்களின் இடர்கடனை சீர்செய்யும் வகையில் | 180,000.00 |
| 2 | 2 | தை.யோகேஸ்வரன் | இடர்கடன் வழங்கும் வகையில் | 232,000.00 |
| 3 | 3 | சி.மதிவதனி | இடர்கடன் வழங்கும் வகையில் | 250,000.00 |
| 4 | 4 | த.மாலினி | இடர்கடன் வழங்கும் வகையில் | 250,000.00 |
| 5 | 5 | பொது முகாமையாளர், MPCS, பருத்தித்துறை | 2022 டிசம்பர் மாதம் சபை வாகனங்களிற்கு எரிபொருள் நிரப்பியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 300,000.00 |
| 6 | 6 | Selva Electricals | வீதி விளக்குள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 152,350.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 7 | i7 Computers | கணணி கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 268,000.00 |
| 8 | 8 | i7 Computers | கணணி கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 268,000.00 |
| 9 | 9 | வாணி படிப்பகம் | சமத்தனை 4ம் குறுக்குத்தெரு வீதி அமைத்தல் வேலைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 540,391.90 |
| 10 | 10 | வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையம் | சிவபுர வீதி (சடையாண்டி இணைப்பு வீதி) அமைத்தல் வேலைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 281,788.65 |
| 11 | 11 | Kestrel Service (PVT) Ltd | எமது நகராட்சி மன்ற பிரிவுகளுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தனியார் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்களுக்கான நவம்பர் 2022 மாத வேதனக் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 181,336.50 |
| 12 | 12 | பொது முகாமையாளர், MPCS, உடுப்பிட்டி | வறுமை ஒழிப்பும் வாழ்வாதாரமும், பாலுணவு மருந்து வகை சேய் பராமரிப்பு மற்றும் தாய்மார் நலன்புரித்திட்டங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 199,980.00 |
| 13 | 13 | S.Anton | NP LW – 0677 இலக்க வாகனத்திருத்த வேலைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 987,500.00 |

முன்மொழிந்தவர் : திரு.பா.ஜெகன் வழிமொழிந்தவர் : திரு.சசெல்வேந்திரா

**தீர்மான இல :1243/20.12.2022**

**ரூபா 150,000.00 இற்கு உட்பட்ட பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கல்.**

பின்வரும் விபரப்படியான ரூபா 150,000.00 இற்கு உட்பட்ட கொடுப்பனவுகளுக்கான அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| தொ. இல | உ.சீ. இல | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | November 01 | காந்தி சனசமூக நிலையம் | காந்தி சனசமூக நிலையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களின் ஒக்டோபர் 01.10.2022 – 31.10.2022 வரையான காலப்பகுதிக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 114,400.00 |
| 02 | November | ஆர்.லக்ஷனா (பயிலுனர்) | 2022 ஆவணி, புரட்டாதி, ஐப்பசி மாதங்களிற்கான வேதனக் கொடுப்பனவு | 27,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 02 | | வழங்கப்படும் வகையில் | |
| 03 | November 03 | எஸ்.மோகனசுந்தரம் | 01.10.2022 – 31.10.2022 வரை பத்திரிகைகள், சஞ்சிகைகள் கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 11,600.00 |
| 04 | November 04 | Valvai Seamen Welfare Association | வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தினர் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் நீச்சல் தடாக பராமரிப்பாளர் ஒக்டோபர் மாதத்திற்கான கொடுப்பனவு வழங்கும் வகையில் | 35,000.00 |
| 05 | November 05 | Chief Account, Sri Lanka Railways | யூன் மாதத்திற்கான கடமை மற்றும் விடுமுறைக்குரிய புகையிரத ஆணைச்சீட்டிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 28,000.00 |
| 06 | November 06 | முகாமையாளர், இலங்கை மின்சார சபை | நகராட்சி மன்றப் பிரிவுகளின் ஒக்டோபர் மாத மின்சாரக்கட்டணத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>(நீச்சல் தடாகம் - 610.00<br>மீன் சந்தைக்கட்டடம் - 660.00<br>வாகனத்தரிப்பிடம் - 2,260.00<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.1 - 985.00<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.2 – 485.00<br>மரக்கறிச்சந்தைக் கடை இல.3 – 4,385.00<br>அலுவலகக்கட்டடம் - 20,316.00<br>தொண்டமானாறு சிற்றுண்டிச்சாலை – 420.52) | 30,121.52 |
| 07 | November 07 | Vigneswara Trade Centre | RB – 4212 இலக்க Tractor இற்குரிய Oil கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,900.00 |
| 08 | November 08 | Advance Techonology Systems | Fax திருத்தத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 500.00 |
| 09 | November 09 | R.Mahenthiran | பின்னல் சிதைவடைந்த கதிரைகளின் பின்னலை மீண்டும் பாவனைக்கு ஏற்ற வகையில் பின்னியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 3,400.00 |
| 10 | November 10 | எஸ்.சர்மி (பயிலுனர்) | 2022 ஒக்டோபர் மாதத்திற்கான வேதனக் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 9,000.00 |
| 11 | November 11 | Sannithiyan Tyre Works | YM – 7202 இலக்க ஓட்டோவிற்கு Tube கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,400.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | November 12 | Lanka Filling Station | YM – 7202 இலக்க ஓட்டோவிற்கு Oil கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,600.00 |
| 13 | November 13 | Managing Director, Sundra Security Plus Cleaning (Pvt) Ltd | எமது நகராட்சி மன்ற பிரிவுகளுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தனியார் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்களுக்கான ஒக்டோபர் 2022 மாத வேதனக் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 135,182.32 |
| 14 | November 16 | Advance Techonology Systems | கணணி திருத்தத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,500.00 |
| 15 | November 17 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 1. 06 சபை உத்தியோகத்தர், ஊழியருக்கான ஆவணி, புரட்டாதி மாதங்களிற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 56,731.58<br>2. 03 சபை ஊழியர்களுக்கான சந்நிதி உற்சவ காலத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 25,577.25 | 82,308.83 |
| 16 | November 18 | வை.சகிந்தன் (பொதுச்சுகாதார பரிசோதகர்) | 2022 தை – வைகாசி வரையான மாதங்களிற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 49,000.00 |
| 17 | November 19 | Kanthy Community Center | நவீன சந்தைக்கட்டடத்தின் கழிவறை திருத்த வேலைக்கான பிடிபணம் வழங்கப்படும் வகையில் | 7,486.15 |
| 18 | November 20 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | “K” படிவம் வழங்குவதற்காக 2021 ஆம் ஆண்டு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் ஒதுக்கிய தொகையில் எஞ்சிய தொகையினை திரண்ட நிதிக்கு மாற்றும் வகையில் | 945.00 |
| 19 | November 21 | Kanthy Community Center | நகராட்சிமன்ற சுற்றுமதில் வேலைக்கான பிடிபணம் வழங்கும் வகையில் | 2,638.87 |
| 20 | November 22 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 1. 03 சபை உத்தியோகத்தர், ஊழியருக்கான ஆவணி, புரட்டாதி மாதங்களிற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 23,902.05<br>2. 10 சபை ஊழியர்களுக்கான சந்நிதி உற்சவ காலத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 74,371.29 | 98,273.34 |
| 21 | November | செயலாளர், நகராட்சி மன்றம், | 1. 03 சபை ஊழியருக்கான புரட்டாதி மாதத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு | 74,457.78 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 23 | வல்வெட்டித்துறை | வழங்கப்படும் வகையில் - 5,650.41<br>2. 10 சபை ஊழியர்களுக்கான சந்நிதி உற்சவ காலத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 68,457.37<br>3. இ.குபேந்திரன் - அலுவலக தேவைக்காக யாழ்ப்பாணம் சென்றமைக்கான பிரயாணக் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 350.00 | |
| 22 | November 24 | இ.சுரேனும் மறுபேரும் | தவிசாளர், துணைத்தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான 2022 ஒக்டோபர் மாதத்திற்குரிய தொலைபேசி கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 25,500.00 |
| 23 | November 25 | Register General | 2022 ஆம் ஆண்டிற்கான கிளிநொச்சி காணிப்பதிவகத்தின் முத்திரைத்தீர்வை பதிவு செய்தல் கட்டணத்தை மீளளிக்கும் வகையில் | 100.00 |
| 24 | November 26 | Chief Accountant, Sri Lanka Railways | யூலை மாதத்திற்கான கடமை மற்றும் விடுமுறைக்குரிய புகையிரத ஆணைச்சீட்டிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 16,800.00 |
| 25 | November 28 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 2021 ஆம் ஆண்டு வருடாந்த இருப்புக் கணிப்பீட்டுச்சபை மற்றும் ஏலவிற்பனை தொடர்பான கொடுப்பனவுக்கென சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் ஒதுக்கிய தொகையில் எஞ்சிய தொகையினை திரண்ட நிதிக்கு மாற்றும் வகையில் | 12,000.00 |
| 26 | November 29 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 30.08.2022 ஆம் திகதி இடம் பெற்ற திட்டமிடல் குழுக்கூட்டத்தில் பங்குபற்றியோருக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 12,500.00 |
| 27 | November 30 | Managing Director, Sundra Security Plus Cleaning (Pvt) Ltd | 1. தனியார் பாதுகாப்புச்சேவை 2021 இற்கு பாதுகாப்பு பிணைப்பணமாக செலுத்தப்பட்ட வைப்புப்பணத்தினை மீளளிக்கும் வகையில் - 75,000.00<br>2. தனியார் பாதுகாப்புச்சேவை 2022 கேள்வி கோரலின் போது செலுத்தப்பட்ட பாதுகாப்பு வைப்பினை மீளளிக்கும் வகையில் - 15,000.00 | 80,000.00 |
| 28 | November 31 | Emerald Hardware Stores | கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் பொருட்களிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 54,780.00 |
| 29 | November 32 | Subash Bakkery | 12.08.2022 ஆம் திகதி அன்று நடைபெற்ற செயலமர்வின் போது வழங்கப்பட்ட சிற்றுண்டிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 6,600.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | November 35 | த.நிதர்ஷன் (செயலாளர்) | சந்நிதி உற்சவ காலத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 7,542.75 |
| 31 | November 36 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 04 சபை ஊழியர்களுக்கான சந்நிதி உற்சவ காலத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 32,270.71 |
| 32 | November 37 | Emerald Hardware Stores | கொள்வனவு செய்யப்பட்ட சீமெந்திற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 34,800.00 |
| 33 | November 38 | S.Anantharuban | கொள்வனவு செய்யப்பட்ட மணல், சல்லிக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 50,000.00 |
| 34 | November 39 | பா.அகர்ஷன் | 31.10.2022 – 14.11.2022 வரையான காலப்பகுதிக்கு ஆதனவரி நிலுவை அறவீடு செய்தமைக்கான தரகுப்பண கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 34,636.63 |
| 35 | November 40 | Kanagaratnam Construction | LDSP வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திண்மக்கழிவு களஞ்சிய அறை அமைத்தல் வேலைக்கான இறுதிக்கொடுப்பனவினை முற்பணமாக வழங்கும் வகையில் | 45,984.43 |
| 36 | November 41 | முகாமையாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம் | நகராட்சி மன்றப் பிரிவுகளின் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான தொலைபேசிப் பட்டியல் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்<br>0212265622 – 862.97<br>0212265344 – 3,056.90<br>0213154453 – 1,972.39<br>0212263973 – 2,268.77<br>0212265166 – 2,774.06<br>0212263170 – 2,983.33<br>0212265611 – 1,539.14<br>0212265610 – 1,237.11 | 16,694.67 |
| 37 | November 42 | முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை | 2022 ஒக்டோபர் மாதத்திற்கான பஸ்தரிப்பட நீர்ப்பாவனைக்கான நீர்வழங்கல் பட்டியல் கொடுப்பனவு வழங்கும் வகையில | 450.80 |
| 38 | November 43 | பொது முகாமையாளர், MPCS, உடுப்பிட்டி | 5S தொடர்பான பயிற்சி நெறியில் பங்குபற்றியோருக்கான உபசரணைச் செலவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,345.00 |
| 39 | November 44 | Abi Agro Seeds Product | கொள்வனவு செய்யப்பட்ட விதைகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் (பெண்களுக்கான மூலோபாயத்திட்டம்) | 40,000.00 |
| 40 | November 45 | P.Vijayan | கொள்வனவு செய்யப்பட்ட மரக்கன்றுகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் (பெண்களுக்கான மூலோபாயத்திட்டம்) | 128,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 41 | November 46 | Deputy Provincial Director of Agriculture | கொள்வனவு செய்யப்பட்ட விவசாய உபகரணங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 120,000.00 |
| 42 | November 47 | Nithi Fruit Plant Nursery | கொள்வனவு செய்யப்பட்ட மரக்கன்றுகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் (பெண்களுக்கான மூலோபாயத்திட்டம்) | 32,000.00 |
| 43 | November 48 | Semmeen Community Center | சிவபுரவீதி நடைபாதை வேலைக்கான பிடிபணம் வழங்கப்படும் வகையில் | 64,722.51 |
| 44 | November 49 | பே.குகநேசன் (கணக்காளர்) | 09.10.2022 ஆம் திகதி தொடக்கம் 13.10.2022 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற Capacity Building Training Programme இல் பங்கு பற்றியமைக்கான பிரயாணக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 13,000.00 |
| 45 | November 50 | Sannithiyan Tyre Works | LM – 4627 இலக்க Water Bowser இற்கு Tyre மாற்றியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 3,000.00 |
| 46 | November 51 | Asian Media Publication (Pvt) Ltd | குத்தகை தொடர்பான கேள்வி அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரித்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 11,643.75 |
| 47 | November 52 | S.Srivimalakanthan | 1. 17.11.2022 ஆம் திகதி இடம்பெற்ற வரவு செலவு திட்டம் தொடர்பான பயிற்சி நெறியில் வளவாளராக பங்குபற்றியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 3,300.00<br>2. 17.11.2022 ஆம் திகதி இடம்பெற்ற வரவு செலவு திட்டம் தொடர்பான பயிற்சி நெறியில் வளவாளராக பற்றியமைக்கான பிரயாணக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில்- 1,000.00 | 4,300.00 |
| 48 | November 53 | Association Public Finance Accounts of Sri Lanka (APFA SL) | வருடாந்த அறிக்கைகளும் கணக்கறிக்கைகளுக்குமான விருது வழங்கல் நிகழ்வில் மேலதிகமாக கலந்து கொள்வோருக்கான கட்டணம் செலுத்தும் வகையில் | 2,500.00 |
| 49 | November 54 | இ.சுரேனும் மறுபேரும் | உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான 2022 நவம்பர் மாத படியை முற்பணமாக வழங்கும் வகையில் | 270,000.00 |
| 50 | November 59 | Bala Service Station | LM – 4627 இலக்க Water Bowser சேவிஸ் செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 24,900.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 51 | November 60 | Advance Techonology Systems | Net Cable கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 900.00 |
| 52 | November 61 | Chithamparappillai Book Dept | கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,835.00 |
| 53 | November 62 | Asian Media Publication (Pvt) Ltd | 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் மக்கள் பார்வையிடல் அறிவித்தலுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,415.00 |
| 54 | November 63 | New Lanka Farm | கொள்வனவு செய்யப்பட்ட மரக்கன்றுகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 3,000.00 |
| 01 | December 02 | Director General of Pension | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கான 2022 யூலை – செப்ரெம்பர் மாதங்களிற்கான ஓய்வூதிய பங்களிப்பு கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 13,245.21 |
| 02 | December 03 | Valvai Seamen Welfare Association | வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தினர் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் நீச்சல் தடாக பராமரிப்பாளர் நவம்பர் மாதத்திற்கான கொடுப்பனவு வழங்கும் வகையில் | 35,000.00 |
| 03 | December 04 | காந்தி சனசமூக நிலையம் | காந்தி சனசமூக நிலையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு எமது நகராட்சி மன்றத்தின் வெளிவாரி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களின் நவம்பர் 01.11.2022 – 30.11.2022 வரையான காலப்பகுதிக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 121,000.00 |
| 04 | December 05 | பொது முகாமையாளர், MPCS, உடுப்பிட்டி | தேசிய வாசிப்பு மாத நிகழ்விற்கு தேவையான உபசரணைப் பொருட்கள், பரிசுப்பொருட்களை கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 10,018.00 |
| 05 | December 06 | Ark Enterprises (Pvt) Ltd | கொள்வனவு செய்யப்பட்ட விவசாய உபகரணங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 94,000.00 |
| 06 | December 07 | Tharnika Motors | LM – 3651 இலக்க Galley Bowser இற்கு Horse 2”, Clip 2” கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 14,050.00 |
| 07 | December 08 | A.Jegatheesan | HI – 7013 இலக்க வாகனத்தின் உழவு இயந்திரப்பெட்டிக்கு 30209 அளவுள்ள Razor கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 17,050.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 08 | December 09 | K.Namasivayam | நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சிங்கள மொழி பெயர்ப்பு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 5,137.00 |
| 09 | December 10 | கி.விஜயேஸ்வரன் | தாபன விதிக்கோவை தொடர்பாக ஊழியர்களுக்கான செயலமர்வு நகரசபை மாநாட்டு மண்டபத்தில் 29.11.2022 ஆம் திகதி நடைபெற்றதில் வளவாளராக கடமையாற்றியமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 3,600.00 |
| 10 | December 11 | பொது முகாமையாளர், MPCS, உடுப்பிட்டடி | 17.11.2022 ஆம் திகதி இடம்பெற்ற வரவு செலவு திட்டம் தொடர்பான பயிற்சி நெறியில் பங்குபற்றியோருக்கான உபசரணைச் செலவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 2,282.50 |
| 11 | December 12 | Vinmeen Restaurant & Bakery | 17.11.2022 ஆம் திகதி இடம்பெற்ற வரவு செலவு திட்டம் தொடர்பான பயிற்சி நெறியில் பங்குபற்றியோருக்கான றோல் கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 3,000.00 |
| 12 | December 13 | எஸ்.மோகனசுந்தரம் | 01.11.2022 – 30.11.2022 வரை பத்திரிகைகள், சஞ்சிகைகள் கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 11,660.00 |
| 13 | December 14 | செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை | 1. 07 சபை ஊழியர்களுக்கான ஐப்பசி மாதங்களிற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 38,082.93<br>2. 04 சபை ஊழியர்களுக்கான சந்நிதி உற்சவ காலத்திற்கான மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் - 14,316.65 | 52,399.58 |
| 14 | December 16 | Advance Techonology Systems | திருத்தம் செய்யப்பட்ட கணணிக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,800.00 |
| 15 | December 17 | இ.சுனீந்தன் | சந்நிதி உற்சவ காலத்திற்கான விடுமுறை வேதனக்கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 3,469.00 |
| 16 | December 18 | இ.சுரேன் (தவிசாளர்) | சிலிம்கட்டர், Lஆணி கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 1,500.00 |
| 17 | December 19 | Vinmeen Restaurant & Bakery | 17.11.2022 ஆம் திகதி இடம்பெற்ற வரவு செலவு திட்டம் தொடர்பான பயிற்சி நெறியில் பங்குபற்றியோருக்கான எள்ளுப்பாகு கொள்வனவிற்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 3,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | December 21 | எஸ்.சர்மி (பயிலுனர்) | 2022 நவம்பர் மாதத்திற்கான வேதனக் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 10,000.00 |
| 19 | December 22 | ஆர்.லக்ஷனா (பயிலுனர்) | 2022 நவம்பர் மாதத்திற்கான வேதனக் கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 10,000.00 |
| 20 | December 23 | M.Edverd Jacson | HI – 6317, 270 – 1376 ஆகிய இலக்கங்களை உடைய வாகனங்களிற்கு பற்றரி கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும் வகையில் | 127,400.00 |

முன்மொழிந்தவர் : திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர் : திரு.த.சந்தரலிங்கம்

**தீர்மான இல :1244/20.12.2022**

**அலுவலகத்திற்கு பயிலுனர்களை இணைத்தல் :**

வல்வெட்டித்துறை தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் கற்கை நெறியை பயின்றுவரும் பின்வரும் பயிலுனர்களை 01.01.2023 ஆம் திகதி தொடக்கம் ஆறு மாதங்களுக்கு பயிலுனர்களாக இணைத்து அவர்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு உரிய தரப்பினரிடம் அனுமதி கோரிப்பெறுவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

- நெடியகாடு வடக்கு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த **செல்வி.பிரமிதா விஜியராஜன்** (NIC 200258700250)
- மதவடி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த **செல்வி.கரிஸ்மா உதயகுமார்** (NIC 200260800156)

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன்

**தீர்மான இல :1245/20.12.2022**

**நடைமுறைக்கணக்கிலுள்ள மேலதிக திரவப்பணத்தினை நிலையான வைப்பிற்கு மாற்றுதல் :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் நடைமுறைக்கணக்கிலக்கம் 100150000077இல் 30.11.2022 இல் ரூபா 9,269,379.18 உம், கணக்கிலக்கம் 7380583 இல் ரூபா 1,153,895.29 உம் காணப்படுகின்றது. இத்தொகையினை பயன்தரும் வகையில் குறுகிய கால நிலையான வைப்புக்களில் இட்டு வட்டி வருமானங்களை ஈட்டிக்கொள்ள அனுமதி வழங்குவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி வழிமொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன்

**தீர்மான இல :1246/20.12.2022**

**ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல் தடாக பாவனைக்கு முன்பதிவிற்கான கட்டணங்களை நிர்ணயித்தல்**

ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல் தடாகத்தினை பொது மக்கள் பயன்படுத்துவதற்காக முன்பதிவு செய்வதற்கு பின்வரும் வகையில் கட்டணங்களை அறவிடலாமென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- வார நாட்களில்,
  - மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 3,000.00
  - இரண்டு மணித்தியாலங்களுக்கு ரூபா 5,000.00
  - ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட மணித்தியாலங்களுக்கு ரூபா 15,000.00
- வார இறுதி நாட்களில்,
  - மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 3,500.00
  - இரண்டு மணித்தியாலங்களுக்கு ரூபா 5,500.00
  - ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட மணித்தியாலங்களுக்கு ரூபா 16,000.00
- பொது நிகழ்வுகளுக்கு (நாள் வாடகை) ரூபா 15,000.00.

முன்மொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி வழிமொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன்

**தீர்மான இல :1247/20.12.2022**

**பஸ்தரிப்பிடத்திற்கு அணுகுவசதியினை (Ramp) ஏற்படுத்துதல் :**

வல்வெட்டித்துறை சந்தியிலமைந்துள்ள பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால் Fairmed நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 60,000.00 இல் மாற்றுதிறனாளிகளுக்கான அணுகு வசதியினை (Ramp) ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ம.மயூரன் வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1248/20.12.2022**

**2022 ஆண்டு சபைநிதி வேலைத்திட்ட மாற்றம் தொடர்பானது :**

2022 ஆம் ஆண்டு உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட சபைநிதியினூடாக உறுப்பினர் உறுப்பினர் திரு.ஆ.ஞானேந்திரன் அவர்கள் தமது சுய விருப்பின் அடிப்படையில் தம்மால் முன்மொழியப்பட்ட ஊறணி மயானத்திற்கு மதில் அமைத்தல் வேலைத்திட்டத்தினை மாற்றி ஏற்கனவே 2022 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு முழுமையடையாது காணப்படுகின்ற ஊறணி மயானத்திற்கு செல்லுகின்ற பாதைகளில் ஒன்றான வாவினி வீதி 13 ஆம் ஒழுங்கை வேலையினை முழுமைப்படுத்துகின்ற நோக்கம் கருதி குறித்த நிதியினை இவ்வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1249/20.12.2022**

**யா/சிதம்பராக் கல்லூரி மாணவர்கள் நீச்சல் தடாகத்தினை பயன்படுத்துவதற்கான அனுமதி :**

யா / சிதம்பராக் கல்லூரி மாணவர்கள் (**தரம் 1-5**) ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல் தடாகத்தில் வார இறுதி நாட்களில் நீச்சல் பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கலாமென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :1250/20.12.2022**

**வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் கௌரவ உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நீச்சல் தடாகத்தினை பயன்படுத்துவதற்கான அனுமதி :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுடன் மாதத்தில் ஒரு திங்கட்கிழமை நீச்சல் தடாகத்தினை இலவசமாக பயன்படுத்திக்கொள்வதற்கு அனுமதிக்கலாமென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :1251/20.12.2022**

**பொலிகண்டி மீன்சந்தையினை கூறுவிலை சந்தையாக மாற்றுதல் :**

பொலிகண்டி மீன்சந்தையினை கூறுவிலை சந்தையாக்குதல் தொடர்பாக அப்பிரதேச வாழ் மக்களின் வாழ்வாதாரம் கருதி நகராட்சி மன்றத்திற்கு எவ்வித வருமான இழப்புமின்றி நகரசபையின் துணைவிதிகளின் நிபந்தனைகளிற்கிணங்க அவ்விதிகளை குறித்த கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் ஏற்கின்ற பட்சத்தில் மீளவும் கூறுவிலை சந்தையாக வழங்க அனுமதிக்கலாமென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம் வழிமொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா

**தீர்மான இல :1252/20.12.2022**

**தொண்டைமானாறு மீன்சந்தையினை கூறுவிலை சந்தையாக மாற்றுதல் :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குள் உள்ள தொண்டைமானாறு மீன்சந்தையினை குறித்த கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் கூறுவிலை சந்தையாக்க கோருமிடத்து மீண்டும் நகராட்சி மன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழமைந்த கூறுவிலை சந்தையாக மாற்ற அனுமதிக்கலாமென கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதுடன் குறித்த சங்கத்தின் கோரிக்கை சமர்ப்பிக்கப்படமிடத்து அவ்விடயம் சாதகமாகப் பரிசீலிக்கப்படலாமெனவும் சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.கு.கமலதாஸ் வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1253/20.12.2022**

**வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் சம்பளக்கணக்கிலுள்ள மிகைப்பணத்தினை அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்துதல் :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் சம்பளக்கணக்கில் ஒரு மில்லியன் மிகைப்பணம் இருப்பதனால் அதனை அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்துவதற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியினை பெற்றுக்கொள்வதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ச.செல்வேந்திரா வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :1254/20.12.2022**

**வாழ்வாதார பயனாளிகளிடம் மேலதிக செலவினத்தினை பெற்று சீர்செய்தலுக்கான தழுவல் அனுமதி**

2022 ஆம் ஆண்டு வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொள்கின்ற பயனாளிகள் தாம் பெற்றுக்கொள்ளுகின்ற உதவிகளுக்கான செலவினம் சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட

தொகையினை விட மேலதிகமாக காணப்படுகின்ற பட்சத்தில் அவற்றிற்கான நிதியினை தாமே செலுத்தி பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்திருப்பதனால் அதற்கான தழுவல் அனுமதியினை வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானமெடுக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ஆ.ஞானேந்திரன் வழிமொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்

**தீர்மான இல :1255/20.12.2022**

**அலுவலகத்தில் CDLG திட்டத்தின் கீழ் மாற்றுதிறனாளிகளுக்கான அணுகுவசதியினை (Ramp) ஏற்படுத்துதல் :**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்திற்கு முன்னால் CDLG திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 200,000.00 இல் மாற்றுதிறனாளிகளுக்கான அணுகு வசதியினை (Ramp) ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென சபையில் ஆராயப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர்:- திரு.ம.மயூரன் வழிமொழிந்தவர்:- திரு.த.சுந்தரலிங்கம்

**தீர்மான இல :1256/20.12.2022**

**வகைமாற்ற அனுமதி :**

2022 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் பின்வரும் தலைப்பில் ஒதுக்கீடானது பற்றாக்குறையாக உள்ளமையால் அதனை பின்வரும் வகையில் வகைமாற்றம் செய்ய அனுமதிப்பதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| **சேமிப்பு தலைப்பு (தற்போதைய மீதி)** | **செலவின தலைப்பு (தற்போதைய மீதி)** | **மாற்றவேண்டிய தொகை** |
|---|---|---|
| 1-3-419(அ)<br>ஆதனவரி பேரேடு எழுதுதல்<br>**18,050.00** | 1-3-419(ஆ)<br>ஆதனவரி அறிவித்தல் பத்திரம் எழுதுதல், பரிசீலனை செய்தல்<br>**28,820.00** | **2,000.00** |
| 2-1-431<br>எழுதுகருவிகளும், பணிமனைத் தேவைப்பொருட்களும்<br>**15,000.00 -14,000.00** | 1-2-431<br>காசோலைகள், எழுதுகருவிகளும், பணிமனைத்தேவைப்பொருட்களும்<br>**46,989.57** | **93,000.00** |
| 2-2-431<br>எழுதுகருவிகளும், பணிமனைத் தேவைப்பொருட்களும்<br>**15,000.00 -14,000.00** | | |
| 1-3-419(அ)<br>ஆதனவரி பேரேடு எழுதுதல்<br>**18,050.00 -15,000.00** | | |
| 1-6-458<br>ஊழியர் பயிற்சியும், பயிற்சி தொடர்பான செலவுகள்<br>**124,572.50 – 50,000.00** | | |
| 1-1-459<br>பொது வரவேற்புகள், உபசரனைகள், ஏனைய செலவுகள்<br>**104,496.00 – 75,000** | 1-1-441(11)<br>வாகனங்களை பழுது பார்த்தலும் பேணலும்<br>**936,377.59** | **140,000.00** |
| '1-3-419(ஈ)<br>பயிற்சி செலவு<br>**20,000.00 – 15,000** | | |
| 1-6-459<br>உபசரணைச் செலவுகள், | | |

| | | |
|---|---|---|
| மொழிபெயர்ப்பு<br>**69,863.00 –50,000** | | |
| 1-3-485<br>ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதி<br>**50,000.00** | 1-2-451<br>முத்திரைச்செலவு<br>**30,000.00** | **40,000.00** |
| 2-2-459(ஆ) IV<br>அனர்த்த இடர் முகாமைத்துவம்<br>**250,000.00** | 1-2-459<br>ஏனையவை - கணக்காய்வுக் கட்டணம், கணக்கெடுப்பு<br>**207,500.00** | **131,000.00** |
| 3-4-479<br>ஏனையவை - விடுமுறை ஆணைச்சீட்டு<br>**5,000.00** | 2-5-479<br>ஏனையவை,விடுமுறை ஆணைச்சீட்டு<br>**484,000.00** | **4,000.00** |
| 3-3-412<br>மேலதிக விடுமுறை வேதனம்<br>**161,808.87** | 6-2-479(அ)<br>ஏனையவை - விடுமுறை ஆணைச்சீட்டு<br>**8,530.00** | **45,000.00** |
| 6-2-453<br>மின்சாரம் வாடகை<br>**25,000.00** | 1-3-431<br>எழுதுகருவிகளும், பணிமனைத் தேவைபொருட்களும்<br>**13,327.80** | **20,000.00** |
| 5-1-437<br>சீருடைகள் தையல் கட்டணம்<br>**8,000.00-7,000.00**<br><br>6-2-437<br>சீருடைகள் தையற் கட்டணஙகள்<br>**4,000.00 – 2,000.00** | 1-3-437<br>சீருடைகள், தையல் கட்டணங்கள், மழை அங்கி<br>**5,000.00** | **9,000.00** |

முன்மொழிந்தவர்:- திரு.பா.ஜெகன்　　　　வழிமொழிந்தவர்:- திருமதி.க.சுந்தரேஸ்வரி